# DEPOSITION OF WITNESS

(Chapter XXII code of CRIMINAL Procedure)

## THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PADMANABHAPURAM

| | |
|---|---|
| Calender Case No. | : C.C. 429/2022 |
| Deposition of Witness for Prosecution | : P.W. 6 (L.W. 8 ) |
| Name | : John Bennet |
| Father's Name | : Siluviai Antony |
| Village | : Appattuvilai |
| Taluk | : Kalkulam |
| Calling | : Driver |
| Religion | : Christian |
| Caste | :-- |
| Age | : 49 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 26.07.2023

**(1, 2 எதிரிகள் ஆஜர் )**

**முதல் விசாரணை-**

நான் அப்பட்டுவிளையில் குடியிருந்து வருகிறேன். தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் டிரைவராக வேலை பார்த்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. அ.சா.1 மேரி ரத்தினம் என்பவரையும் தெரியாது. இன்று நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமுலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள கையொப்பம் என்னுடையதல்ல. வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சி பிறழ் சாட்சியாக கருதியதால் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. அதன் அடிப்படையில் குறுக்குவிசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது

**குறுக்குவிசாரணை**

கடந்த 13.08.2022 ம் தேதி நானும் ரத்தினராஜ் என்பவரும் மேட்டுக்கடை ஜங்சனில் வரும்போது தக்கலை காவல் ஆய்வாளர் வாகன தணிக்கை செய்துகொண்டிருந்ததாகவும் அந்த வழியாக வந்த TN58T1497 கீரோ கோண்டா ஸ்பிளன்டர் பிளஸ் இருசக்கர வாகனத்தில் மறித்து சோதனை செய்து விசாரித்தபோது ஆஜர் எதிரிகள் இந்த வழக்கில் குற்ற செயலில்

ஈடுபட்டிருப்பதாக கூறி ஒரு ஒப்புதல் வாக்குமுலம் கொடுத்தார் என்றும் அதனடிப்படையில் எதிரி நவீன்ஆன்றனிராஜா அவரது பேன்ட் பாக்கெட்டில் மறைத்து வைத்திருந்த நகைகளை ஆஜர் செய்தார் என்றும் மேலும் 2 இருசக்கர வாகனங்களையும் புலியூர்குறிச்சி ஆற்று பாலத்தில் மறைத்து வைத்திருந்ததையும் எங்கள் முன்னியையில் ஆஜர்படுத்தினார் என்றும் நீங்கள் ஒப்புதல் வாக்குமுலத்திலும் அத்தாட்சியிலும் கையொப்பம் செய்துவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்துசெய்தும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

குற்றவியல் நடுவர் எண்.1,
பத்மநாபபுரம்